# காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2019

## வகுப்பு 11

பதிவெண்

நேரம்: 2.30 மணி **PART - III - கணக்குப்பதிவியல்** மொத்த மதிப்பெண்கள்: 90

குறிப்பு: பகுதி - I **20×1=20**

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) நிதித் தகவல்களின் அகப் பயனாளராகக் கருதப்படுபவர் யார்?
அ) கடனீந்தோர் ஆ) பணியாளர் இ) வாடிக்கையாளர் ஈ) அரசு

2) .............. ஆம் ஆண்டில் லூகா பாசியோலி என்ற இத்தாலியர் இரட்டைப் பதிவு கணக்கியல் முறையை மேம்படுத்தினர்.
அ) 1449 ஆ) 1494 இ) 1944 ஈ) 1459

3) வணிகம் நீண்ட காலம் தொடர்ச்சியாக நடைபெறும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது
அ) வணிக தனித்தன்மை கருத்து ஆ) நிறுவன தொடர்ச்சி கருத்து
இ) கணக்கியல் கால அனுமானம் ஈ) முன்னெச்சரிக்கை கொள்கை

4) இந்தியாவில் கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு
அ) இந்திய மைய வங்கி ஆ) இந்திய அடக்கவிலை மற்றும் கணக்காளர் நிறுவனம்
இ) உச்சநீதிமன்றம் ஈ) இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனம்

5) ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு ரூ. 20,000 மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ரூ. 12,000 எனில் அந்நிறுவனத்தின் முதல் ..............
அ) ரூ. 2,000 ஆ) ரூ. 8,000 இ) ரூ. 22,000 ஈ) ரூ. 18,000

6) பின்வருவனவற்றில் பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு எது?
அ) கட்டடம் கணக்கு ஆ) கொடுபட வேண்டிய சம்பள கணக்கு
இ) பாலன் நிறுவனம் கணக்கு ஈ) சம்பளம் கணக்கு

7) பேரேட்டுக் கணக்குகள் தயாரிப்பதின் முக்கிய நோக்கம்
அ) நிதிநிலைமையை அறிய ஆ) இலாபம் அல்லது நட்டத்தை அறிய
இ) நிதிநிலைமை மற்றும் இலாப நட்டத்தை அறிய ஈ) ஒவ்வொரு பேரேட்டுக் கணக்கின் இருப்பை அறிய

8) கணேசன் என்பவரின் கணக்கின் வரவு மொத்தத்தை விட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள்
அ) வரவு இருப்பு ஆ) பற்று இருப்பு இ) இருப்பு இன்மை ஈ) பற்று மற்றும் வரவு இருப்பு

9) பேரேட்டுக் கணக்குகளை தயாரித்து முடித்தவுடன் அடுத்து தயாரிக்கப்படுவது
அ) வியாபாரக் கணக்கு ஆ) இருப்பாய்வு இ) குறிப்பேடு ஈ) இலாப நட்டக் கணக்கு

10) கீழ்க்கண்ட கணக்குகளில் எந்தக் கணக்கின் இருப்பு இருப்பாய்வில் பற்று பத்தியில் தோன்றும்?
அ) பற்பல கடனீந்தோர் கணக்கு ஆ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு
இ) எடுப்புகள் கணக்கு ஈ) முதல் கணக்கு

11) விற்பனை ஏடு எதைப் பதிவு செய்ய உதவுகிறது?
அ) அனைத்து சரக்குகளின் விற்பனை ஆ) அனைத்துச் சொத்துக்களின் கடன் விற்பனை
இ) அனைத்து சரக்குகளின் கடன் விற்பனை ஈ) அனைத்து சொத்துக்கள் மற்றும் சரக்குகள் விற்பனை

12) விற்பனை ஏட்டில் பதிவு செய்வதற்கு பயன்படும் அடிப்படை ஆவணம்
அ) பற்றுக் குறிப்பு ஆ) வரவு குறிப்பு இ) இடாப்பு ஈ) ரொக்க ரசீது

13) ரொக்க ஏடு ஒரு ..............
அ) துணை ஏடு ஆ) முதன்மை ஏடு
இ) உரிய குறிப்பேடு ஈ) துணை ஏடு மற்றும் முதன்மை ஏடு இரண்டும்

14) தள்ளுபடி, ரொக்கம் மற்றும் வங்கி பத்திகளுடைய ரொக்க ஏட்டை இவ்வாறு அழைக்கலாம்.
அ) சாதாரண ரொக்க ஏடு ஆ) இருபத்தி ரொக்க ஏடு
இ) முப்பத்தி ரொக்க ஏடு ஈ) சில்லறை ரொக்க ஏடு

15) சில்லறை ரொக்க ஏட்டின் இருப்பு
அ) ஒரு செலவு ஆ) ஒரு இலாபம் இ) ஒரு சொத்து ஈ) ஒரு பொறுப்பு

16) சலுகை நாட்கள் .............. ஆகும்.
அ) 3 ஆ) 4 இ) 2 ஈ) 6

17) வங்கி சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதில் உதவுவது
அ) வங்கி அறிக்கை ஆ) ரொக்க ஏடு
இ) வங்கி அறிக்கை மற்றும் ரொக்க ஏட்டின் வங்கி பத்தி ஈ) சில்லறை ரொக்க ஏடு

18) வங்கியிலிருந்து பணம் எடுக்கும் போது வங்கியானது
அ) வாடிக்கையாளர் கணக்கில் வரவு செய்யும் ஆ) வாடிக்கையாளர் கணக்கில் பற்று செய்யும்
இ) வாடிக்கையாளர் கணக்கில் பற்று மற்றும் வரவு செய்யும் ஈ) மேற்கண்ட ஏதுமில்லை

19) கணக்கியல் சமன்பாட்டின்படி கணக்குகளை .............. பிரிவுகளாகப் பிரிக்கலாம்.
அ) 4 ஆ) 3 இ) 5 ஈ) 2

20) எந்த வரிசை முறையில் வணிக நடவடிக்கைகள் பதியப்பட வேண்டும்?
(1) இருப்பாய்வு (2) பேரேடு (3) நடவடிக்கைகள் (4) குறிப்பேடு
அ) (2) (3) (4) (1) ஆ) (3) (4) (2) (1) இ) (1) (2) (3) (4) ஈ) (3) (2) (1) (4)

பகுதி - II **7×2=14**

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.
அவற்றுள் வினா எண் 30-க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

21) கணக்கியல் தகவல்களில் ஆர்வமுடைய நபர்கள் யாவர்?
22) கணக்கேடுகள் பராமரிப்பின் நன்மைகள் இரண்டினைத் தருக.
23) இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.
24) பின்வரும் நடவடிக்கைகளை ஜவுளி வியாபாரம் செய்யும் காவியா அவர்களின் குறிப்பேடுகளில் பதிவு செய்க.

| 2019 | | | ரூ. |
|---|---|---|---|
| மார்ச் | 1 | காவியா வியாபாரம் தொடங்க கொண்டு வந்த ரொக்கம் | 60,000 |
| | 2 | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | 10,000 |
| | 8 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 28,000 |
| | 15 | சொந்தப் பயன்பாட்டிற்காக பணம் எடுத்தது | 4,000 |

Scanned by CamScanner

25) பின்வரும் நடவடிக்கையிலிருந்து அறைகலன் கணக்கைத் தயாரிக்கவும்.

| 2018 | | | ரூ. |
|---|---|---|---|
| ஜனவரி | 1 | கையில் உள்ள அறைகலன் | 20,000 |
| | 1 | அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது | 40,000 |
| | 30 | அறைகலன் விற்றது | 4,000 |

26) இருப்பாய்வு என்றால் என்ன?

27) பின்வரும் விவரங்களிலிருந்து தனன்யா என்பவரின் 2018 டிசம்பர் 31-ம் நாளுக்குரிய வங்கி சரிக்கட்டும் பட்டியலை தயார் செய்க.

| | | ரூ. |
|---|---|---|
| 1. | ரொக்க ஏட்டின்படி இருப்பு | 10,000 |
| 2. | செலுத்திய காசோலை வசூலாகாதது | 2,000 |
| 3. | வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது | 1,000 |

28) கொள்முதல் ஏடு என்றால் என்ன?

29) முப்பத்தி ரொக்க ஏடு என்றால் என்ன?

30) பிரசாத் அவர்களின் பின்வரும் நடவடிக்கைகளை தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

| 2019 | | | ரூ. |
|---|---|---|---|
| ஜனவரி | 1 | கையிருப்பு ரொக்கம் | 11,200 |
| | 5 | ரவியிடமிருந்து பெற்ற ரொக்கம் | 3,000 |
| | 27 | மோகனுக்கு ரொக்கம் செலுத்தியது | 7,000 |
| | 31 | வாடகை கொடுத்தது | 1,000 |

## பகுதி - III

**7×3=21**

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**அவற்றுள் வினா எண் 40-க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.**

31) கணக்கியலின் முக்கியத்துவத்தை விளக்குக.

32) சிறுகுறிப்பு வரைக: (i) பண மதிப்பீட்டுக் கருத்து (ii) பொருத்துகைக் கருத்து

33) கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக:

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| | ரூ. | | | | ரூ. |
| அ) | 2,00,000 | = | 1,50,000 | + | ? |
| ஆ) | 1,00,000 | = | ? | + | 30,000 |
| இ) | ? | = | 1,20,000 | + | 80,000 |

34) பின்வரும் தொடக்க பதிவினைக் கொண்டு திரு. பாபு என்பவரின் ஏடுகளில் பேரேட்டுக் கணக்கைத் தயாரிக்கவும்.

| நாள் | விவரம் | | பே.ப. எண் | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|---|---|
| 2019 சனவரி 1 | ரொக்கக் க/கு | ப | | 55,000 | |
| | சரக்கிருப்பு க/கு | ப | | 65,000 | |
| | பாபு முதல் க/கு | | | | 1,20,000 |
| | (இருப்புகள் கணக்கில் கொண்டு வரப்பட்டது) | | | | |

35) பின்வரும் நடவடிக்கைகளை 2018 நவம்பர் மாதத்திற்கான அரசன் மோட்டார் உதிரிபாகங்கள் விற்பனையாளர் அவர்களின் கொள்முதல் மற்றும் விற்பனை ஏடுகளில் பதிவு செய்க.

| 2018 | | | ரூ. |
|---|---|---|---|
| நவம்பர் | 1 | சண்முகத்திடமிருந்து சரக்கு கடனுக்கு வாங்கியது | 20,000 |
| | 4 | ராஜாவிற்கு கடனுக்கு சரக்கு விற்றது | 15,000 |
| | 15 | ராமுவிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | 25,000 |
| | 20 | ஆாத்திக்கு கடனுக்கு சரக்கு விற்றது | 20,000 |
| | 25 | மணிக்கு ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 5,000 |

36) பின்வரும் விவரங்களைக் கொண்டு செல்வம் என்பவரின் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டை முன்பணமீட்பு முறையில் தயாரிக்கவும்.

| 2019 | | | ரூ. |
|---|---|---|---|
| சனவரி | 1 | கையிருப்பு ரொக்கம் | 200 |
| | 1 | தலைமைக் காசாளரிடமிருந்து ரொக்கம் பெற்றது | 1,800 |
| | 5 | எழுதுபொருள் வாங்க செலுத்தியது | 300 |
| | 7 | அஞ்சல் செலவு செய்தது | 200 |
| | 15 | சுஜாதாவிற்கு ரொக்கம் செலுத்தியது | 250 |
| | 30 | கூலி செலுத்தியது | 250 |

37) பின்வரும் விவரங்களிலிருந்து 31-12-2017 ஆம் நாளுக்குரிய வங்கி சரிக்கட்டும் பட்டியல் தயாரித்து வங்கி அறிக்கையின் படியான இருப்பினைக் காண்க.

| | விவரம் | ரூ. |
|---|---|---|
| 1. | ரொக்க ஏட்டின்படி இருப்பு | 12,500 |
| 2. | செலுத்திய காசோலை வசூல் ஆகாதது | 1,500 |
| 3. | விடுத்த காசோலை முன்னிலைப்படுத்தாதவை | 750 |
| 4. | வங்கியால் நேரடியாக பெற்ற பங்காதாயம் | 200 |

38) ரொக்க தள்ளுபடிக்கும் வியாபார தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளில் மூன்றினைத் தருக.

39) விடுபட்ட தகவல்களை நிரப்புக:

i) .................. க/கு ப
.................. க/கு
(அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது ரூ. 4,000)

ii) .................. க/கு ப
.................. க/கு
(மின்கட்டணம் செலுத்தியது ரூ. 500)

iii) .................. க/கு ப
.................. க/கு
(ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ரூ. 15,000)

40) பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து விற்பனை கணக்கு தயாரிக்கவும்.

Scanned by CamScanner

| 2018 | | | ரூ. |
|---|---|---|---|
| ஜனவரி | 1 | சரண்யா என்பவருக்கு ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 40,000 |
| | 7 | காவியா என்பவருக்கு சரக்கை விற்று காசோலை பெற்றது | 25,000 |
| | 20 | ரஞ்சித் என்பவருக்கு கடனுக்கு விற்றது | 12,000 |

## பகுதி - IV

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளிக்கவும்:** **7×5=35**

41) பின்வரும் நடவடிக்கைகளை கணக்கியல் சமன்பாட்டின்படி பதிவு செய்து காட்டுக.

அ)

| | | ரூ. |
|---|---|---|
| அ) | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 1,00,000 |
| ஆ) | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 25,000 |
| இ) | ரூ. 20,000 மதிப்புள்ள சரக்கை விற்றது | 23,000 |
| ஈ) | வாடகை செலுத்தியது | 1,000 |
| உ) | ரொக்கத்திற்கு கணிப்பொறி வாங்கியது | 40,000 |

**(அல்லது)**

ஆ) கீழ்கண்ட தகவல்களிலிருந்து 2018 மார்ச் 31-ஆம் நாளன்றைய வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயார் செய்து வங்கி அறிக்கையின்படியான இருப்பினை கண்டறியவும்.

| | | ரூ. |
|---|---|---|
| அ) | ரொக்க ஏட்டின்படி இருப்பு | 13,000 |
| ஆ) | வங்கியில் வைப்பு செய்த காசோலை வசூலித்து வரவு வைக்கப்படாதது | 12,000 |
| இ) | விடுத்த காசோலை செலுத்துகைக்கு இதுவரை முன்னிலைப்படுத்தப்படாதது | 21,000 |
| ஈ) | வங்கியில் பிடித்தம் செய்யப்பட்ட வட்டி | 1,000 |
| உ) | நிலை அறிவுறுத்தலின்படி வங்கி செலுத்திய வாடகை | 1,200 |

42) அ) பின்வரும் நடவடிக்கைகளை திரு. சக்தி அவர்களின் குறிப்பேட்டில் பதிவு செய்க.

| 2018 | | | ரூ. |
|---|---|---|---|
| சனவரி | 1 | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 1,00,000 |
| | 2 | கனிஷ்காவிடமிருந்து கடன் கொள்முதல் செய்தது | 40,000 |
| | 3 | வங்கியில் ரொக்கம் செலுத்தியது | 20,000 |
| | 14 | சுரேஷ்க்கு சரக்கு ரொக்கத்திற்கு விற்றது | 10,000 |
| | 15 | சொந்த உபயோகத்திற்கு வங்கியில் ரொக்கம் எடுத்தது | 1,000 |

**(அல்லது)**

ஆ) பின்வரும் நடவடிக்கைகளை கிருஷ்ணாவின் கொள்முதல் மற்றும் விற்பனை ஏடுகளில் பதிவு செய்க.

| 2018 | | | ரூ. |
|---|---|---|---|
| டிசம்பர் | 1 | சத்யாவிடம் சரக்கு வாங்கியது | 15,000 |
| | 4 | மணியிடம் ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 10,000 |
| | 6 | சரண்யாவிற்கு கடனாக சரக்கு விற்றது | 9,000 |
| | 17 | பாலாவிடம் சரக்கு வாங்கியது | 20,000 |
| | 21 | நித்யாவிற்கு விற்றது | 5,000 |

43) அ) பின்வரும் நடவடிக்கைகளை நேரடியாக பேரேட்டில் எடுத்து எழுதவும்.

| 2018 | | | ரூ. |
|---|---|---|---|
| ஜனவரி | 1 | சித்ரா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 50,000 |
| | 5 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 20,000 |
| | 9 | டேவிட் என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது | 16,000 |
| | 14 | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | 4,000 |
| | 31 | வாடகை செலுத்தியது | 1,200 |

**(அல்லது)**

ஆ) பாண்டியன் என்பவரது ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்காணும் இருப்புக்களைக் கொண்டு 31.03.2017-ஆம் ஆண்டிற்குரிய இருப்பாய்வு தயாரிக்கவும்.

| | ரூ. |
|---|---|
| முதல் | 50,000 |
| சரக்கிருப்பு | 15,000 |
| காப்பீடு | 1,500 |
| கொள்முதல் | 20,000 |
| எடுப்புகள் | 6,000 |
| தபால் செலவு | 750 |
| பெற்ற தள்ளுபடி | 1,250 |
| விற்பனை | 26,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 4,000 |
| கட்டடம் | 32,000 |
| ரொக்கம் | 5,000 |

44) அ) அசோக் என்பவரின் கீழ்கண்ட நடவடிக்கைகளை ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏட்டில் பதிவு செய்யவும்.

| 2017 | | | ரூ. |
|---|---|---|---|
| டிசம்பர் | 1 | கைவச ரொக்கம் | 26,500 |
| | 9 | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 24,000 |
| | 15 | மோகனிடம் சரக்கு கடனுக்கு வாங்கியது | 20,000 |
| | 19 | மின்கட்டணம் செலுத்தியது | 1,800 |
| | 25 | மோகனுக்கு ரூ. 19,500 செலுத்தி அவர் கணக்கு தீர்த்துக் கொண்டது | 20,000 |
| | 30 | வியாபார செலவுகள் ரொக்கமாக செலுத்தியது | 3,000 |

**(அல்லது)**

ஆ) சாரதி என்பவர் துணி வியாபாரி. அவரின் குறிப்பேட்டில் 2018 மார்ச் மாதத்திற்குரிய நடவடிக்கைகளைப் பதிவு செய்க.

| 2018 | | | ரூ. |
|---|---|---|---|
| மார்ச் | 1 | ரொக்கம் ரூ. 60,000; சரக்கு ரூ. 40,000த்துடன்தொழில் தொடங்கியது. | |
| | 3 | லதாவிற்கு சரக்கு விற்றது | 15,000 |
| | 7 | வங்கி மூலம் காப்பீடு செலுத்தியது | 1,000 |
| | 12 | லதாவிடமிருந்து திரும்பி வந்த சரக்கு | 1,500 |
| | 18 | அறக்கட்டளை அமைப்பிற்கு இலவசமாக மதிய உணவு வழங்கியது | 1,300 |

Scanned by CamScanner

45) அ) பின்வரும் விவரங்களைக் கொண்டு ஜெயமணி என்பவரின் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டை முன்பண மீட்பு முறையில் தயாரிக்கவும்.

| 2017 | | | ரூ. |
|---|---|---|---|
| பிப்ரவரி | 1 | கையிருப்பு ரொக்கம் | 250 |
| | 1 | தலைமை காசாளரிடம் ரொக்கம் பெற்றது | 2,250 |
| | 3 | எழுதுபொருள் வாங்கியது | 240 |
| | 6 | பதிவு தபால் மூலம் தலைமை அலுவலகத்திற்கு தபால் அனுப்பியது | 210 |
| | 12 | ஏற்றிச்செல் செலவுகள் செய்தது | 400 |
| | 18 | தேநீர் செலவுகள் செய்தது | 130 |
| | 22 | கணிப்பொறி பழுதுபார்த்தது | 600 |
| | 23 | குமாருக்கு ரொக்கம் செலுத்தியது | 300 |

(அல்லது)

ஆ) பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு கைலாஷ் பர்னிச்சர் நிறுவனத்தின் கொள்முதல் மற்றும் கொள்முதல் திருப்ப ஏட்டில் பதிவு செய்க.

2016
ஜூலை 6 வேலா நிறுவனத்திடம் கடனுக்கு வாங்கியது
50 மின்விசிறிகள் ஒன்று ரூ. 1,200 வீதம்
20 மின்தேய்ப்பான் ஒன்று ரூ. 750 வீதம்
ஜூலை 10 விஜயா நிறுவனத்திடமிருந்து வாங்கியது
10 மின் அடுப்புகள் ஒன்று ரூ. 2,500 வீதம்
19 பாலன் நிறுவனத்திடமிருந்து வாங்கியது
15 நீர் சூடேற்றிகள் ஒன்று ரூ. 4,000 வீதம்
22 பாலன் நிறுவனத்திற்கு சரக்கு திருப்பியது
2 நீர் சூடேற்றிகள் ஒன்று ரூ. 4,000 வீதம்

46) அ) கீழ்க்கண்ட நடவடிக்கைகளிலிருந்து மனோஜ் என்பவரின் தள்ளுபடி, ரொக்கம் மற்றும் வங்கி பத்திகளுடைய ரொக்க ஏட்டை தயாரிக்கவும்.

| 2017 | | | ரூ. |
|---|---|---|---|
| அக்டோபர் | 1 | ரொக்க இருப்பு | 46,000 |
| | | வங்கி இருப்பு | 28,000 |
| | 3 | சிவாவிற்கு ரொக்கம் செலுத்தியது | 14,500 |
| | | தள்ளுபடி பெற்றது | 500 |
| | 7 | ரொக்க விற்பனை | 10,000 |
| | 12 | சரக்குகள் வாங்கி அதற்கு செலுத்த வேண்டிய தொகை கடன் அட்டை மூலம் செலுத்தியது | 25,000 |
| | 18 | பார்த்தீபனிடம் ரொக்கம் பெற்றது | 9,750 |
| | | தள்ளுபடி அளித்தது | 250 |

(அல்லது)

ஆ) சுதாகர் என்பவரது ஏடுகளிலிருந்து 2018 மார்ச் 31 அன்று எடுக்கப்பட்ட பின்வரும் இருப்புகளிலிருந்து இருப்பாய்வு தயாரிக்கவும்.

| | ரூ. |
|---|---|
| கைரொக்கம் | 6,500 |
| பற்பல கடனாளிகள் | 25,000 |
| சரக்கிருப்பு | 11,000 |
| சம்பளம் | 7,000 |
| பற்பல கடனீந்தோர் | 35,000 |
| முதல் | 50,000 |
| கொள்முதல் | 30,000 |
| விற்பனை திருப்பம் | 2,500 |
| வங்கி மேல்வரைப்பற்று | 12,500 |
| அறைகலன் | 9,000 |

47) அ) கீழ்க்கண்ட விவரங்களில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பிலிருந்து குறிப்பேட்டு பதிவில் விடுபட்ட கணக்கு மற்றும் அதன் தொகையைக் கண்டுபிடித்து குறிப்பேட்டில் எழுதவும்.

| நாள் செப். 2019 | விவரம் | பே.ப. எண் | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|---|
| 1 | ........................ ........................ (தொழில் தொடங்கியது) | | 50,000 | |
| 4 | ........................ ........................ (சரக்கு வாங்கியது) | | | 20,000 |
| 9 | ........................ ........................ (ஏற்றிச்செல் செலவு செய்தது) | | | 2,000 |
| 16 | ........................ ........................ (பாரதிக்கு விற்றது) | | 30,000 | |
| 26 | ........................ ........................ (அறைகலன் வாங்கியது) | | | 7,000 |

(அல்லது)

ஆ) பின்வரும் விவரங்களைக் கொண்டு 31-12-2017 திரு. சுகுமார் அவர்களின் ரொக்க ஏட்டில் காணக்கூடிய இருப்பினை கணக்கிடவும்.

| | | ரூ. |
|---|---|---|
| 1. | 31.12.2017 செல்லேட்டின்படி வங்கி இருப்பு | 13,200 |
| 2. | வங்கி கட்டணம் | 300 |
| 3. | ரூ. 2,000 மதிப்புள்ள காசோலை விடுக்கப்பட்டு டிசம்பர் 31 வரை பணமாக்கப்படவில்லை. | |
| 4. | வங்கியில் செலுத்திய ரூ. 3,300-க்கான காசோலை டிசம்பர் 31 வரை வசூலாகவில்லை. | |
| 5. | வங்கி வசூலித்த முதலீடுகள் மீதான வட்டி | 1,400 |

Scanned by CamScanner